**வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச சபை**

**வவுனியா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 21 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஒக்டோபர் 31 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா செட்டிக்குளம் பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் ஐந்து சொத்துக்களின் ஆரம்ப மீதியில் உள்ள சொத்துக்கள் பௌதீகரீதியாக இல்லாத போதும் வருட இறுதியில் சொத்துக்களின் பெறுமதியினுள் உள்ளடக்கப்பட்டமையால் 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் சொத்துக்களின் பெறுமதி ரூபா 9,772,052 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டில் சட்டச் செலவினமாக ரூபா 173,400 செலவிடப்பட்ட போதும் இச் செலவினம் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய வருடங்களின் சில்லறைக் கடன்கொடுத்தோர் வீதம், காலங்கடந்த வைப்புக்கள், நீதிமன்ற குற்றப்பணம், முத்திரைத் தீர்வை,

வட்டி வருமானம் என்பவற்றை திரண்ட நிதிக் கணக்கில் சீராக்குவதற்குப் பதிலாக பிரதியீட்டு ஒதுக்கமாக நாட்குறிப்பு மூலம் சீராக்கப்பட்டுள்ளது.

**1.3.2 பெறவேண்டியவை**

12 ஆண்டுகளுக்கு மேலாக ஆயுள்வேத நன்கொடை ரூபா 43,700 பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒருமுறை எரிபொருளினால் தாங்கியை பூரணமாக நிரப்பி ஓட்டத்தில் ஈடுபடுத்தி எரிபொருள் நுகர்வினை பரீட்சிக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதிக்கோவை விதி (V) 7 | உள்ளகக் கணக்காய்வு நடைமுறைப்படுத்தப்படவில்லை. |
| (இ) | 2011 நவம்பர் 26 ஆம் திகதிய 454 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | அரசாங்கத்துக்குச் சொந்தமான வாகனங்களின் புகை வெளியிடுதல் பரிசோதனை நிறுவனமொன்றில் செய்யப்பட்டு சான்றிதலொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். எனினும் சபையின் 04 வாகனங்களுக்கு மேலே குறிப்பிட்ட நடைமுறை பின்பற்றப்படாததுடன் மீளாய்வாண்டுக்கான வரி அனுமதிப்பத்திரமும் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பெறுகை வழிகாட்டு நெறியின் பிரிவு 8.12 | ஒப்பந்த வேலைகளின் போது அல்லது வழங்கலின் போது ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்கான பெறுமதி சேர் வரித் தொகையானது அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்பாக உள்நாட்டு இறைவரி |

ஆணையாளருக்கு அறிவிக்கப்படுவதுடன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தும் சபையினால் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி ரூபா 1,282,361 தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

---------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 7,189,187 விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 1,741,748 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 5,447,439 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

---------------------------------------

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

பாதீடு சரியான முறையில் தயாரிக்கப்படாமையாலும் மதிப்பீடு சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தப்படாமையினாலும் பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே வேறுபாடு ஏற்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

2015 திசெம்பர் 31 வரை சபைக்குக் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 2,815,954 வடக்கு மாகாண பிரதம செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளது.

#### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

சபையினால் 2011 தொடக்கம் 2015 வரை பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை ரூபா 2,169,110 காணிப் பதிவாளரிடமிருந்து பெற நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.2.4 குத்தகை நிலுவை**

1996, 2013 இல் இருந்து இரு குத்தகையாளரிடமிருந்து வருமதியான சபைக்குரிய குத்தகை நிலுவை ரூபா 93,889 இனை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

**2.3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் 06 வாகனங்கள் நீண்ட காலமாக பாவனையிலில்லாத போதும் பொது நிதித் திணைக்களத்தின் 2015 யூலை 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) சபையில் காணப்படும் 17 வாகனங்களின் உரிமையானது சபைக்கு உரியதாக இல்லாத போதும் அதன் உரிமை மாற்றம் தொடர்பாக இவ் அறிக்கைத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) சபையின் பிரதீயீட்டு ஒதுக்கத்தில் ரூபா 2,500,000 இருந்த போதும் மீளாய்வாண்டில் ரூபா 4,500,000 பிரதீயீட்டு ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டுள்ளதுடன் பிரதீயீட்டு ஒதுக்கத்திற்கான நோக்கமும் இல்லாமை அவதானிக்கப்பட்டுள்ளது.

**2.3.2 மனிதவள முகாமைத்துவம்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 66 ஆக இருந்த போதும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 49 ஆக காட்டப்பட்டுள்ளமையால் பதவியணியினர் பற்றாக்குறை 17 ஏற்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**2.3.3 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்**

சபையின் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். எனினும் குறித்த சபையில் மீளாய்வாண்டில் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடைபெற்றிருக்கவில்லை.

**2.3.4 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபையினால் மீளாய்வாண்டில் 100 நாள் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விளையாட்டரங்கு அமைத்தல், அரசடிக்குளம் தொடர்பில் ரூபா 977,704 மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2016 யூன் 11 வரை பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

(ii) 2015 ம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட Generator இற்கான கொடுப்பனவாக ரூபா 888,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் இவ் அறிக்கைத் திகதி வரை பாவனையில் ஈடுபடுத்தப்படாமலுள்ளது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

கீழ்க் குறிப்பிடப்படும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பான விடயங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(i) வருமான சேகரிப்பு.

(ii) நிலையான சொத்துக்கள்

(iii) முற்பணங்கள்

(iv) மூலதன வேலைகள்

(v) பிரதான பேரேடு